**செய்தி வெளியீடு எண்: 132** **நாள்:22.05.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (22.5.2021) சென்னை, டி.டி.கே.சாலையில் உள்ள எத்திராஜ் திருமண மண்டபத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்துவதில் முன்னுரிமை வழங்கும் வகையில் கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாம்களை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில், சென்னை, தேனாம்பேட்டை மண்டலம், டி.டி.கே.சாலையில் உள்ள எத்திராஜ் திருமண மண்டபத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (22.05.2021) தொடங்கி வைத்தார். இக்கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமில் 26 மாற்றுத்திறனாளிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

கோவிட் தடுப்பூசி செலுத்தப்படும் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மையங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் சிறப்பு கவனம் செலுத்தி, வரிசையில் காத்திருக்காமல், தகுந்த பாதுகாப்பு வழிமுறைகளுடன் அவர்களுக்கு விரைந்து தடுப்பூசி செலுத்தப்படும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு தடுப்பூசி செலுத்த சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும்.

இத்தடுப்பூசி மையங்களில் மாற்றுத்திறனாளிகள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள 18004250111 என்ற உதவி எண் மற்றும் 97007 99993 என்ற காணொலி உதவி எண்களின் வாயிலாக பதிவு செய்யலாம். இந்த உதவி எண்கள் மூலம் பதிவு செய்யும் மாற்றுத்திறனாளிகளுக்கு தடுப்பூசி செலுத்தும் முகாமின் நாள், நேரம் மற்றும் இடம்

போன்ற விவரங்கள் தெரிவிக்கப்படும். பதிவு செய்த மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் இருப்பிடத்திற்கு அருகாமையில் தற்காலிக தடுப்பூசி முகாம்கள் ஏற்படுத்தப்படும்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்ல இயலாத மாற்றுத்திறனாளிகள் என கண்டறியப்பட்ட நபர்களுக்கு, அவர்களின் வீடு அல்லது மிக அருகாமையில் இருக்கும் இடத்திற்கு சென்று தடுப்பூசி செலுத்த சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய மாற்றுத்திறனாளிகளும் மேற்குறிப்பிட்ட இரண்டு உதவி எண்களின் வாயிலாக தடுப்பூசி செலுத்திக்கொள்ள பதிவு செய்து கொள்ளலாம். மாற்றுத்திறனாளியின் வீட்டிற்கு ஒரு மருத்துவ அலுவலர் தலைமையில் ஒரு செவிலியர் கொண்ட மருத்துவக்குழு சென்று பதிவு விவரங்கள் குறித்து கள ஆய்வு மேற்கொள்வார்கள். அந்த ஆய்வின் அடிப்படையில் தற்காலிக மருத்துவ முகாம் அவர்களின் வீடுகளுக்கு மிகவும் அருகாமையில் ஏற்படுத்தப்பட்டு உரிய விதிமுறைகளின்படி தடுப்பூசி செலுத்தப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் திரு. த. வேலு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**